Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தமிழ்நாடு சனி. 13 வால் 10
கோள் 109 இதழ் 163
National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் மேல் ஆடி 8 ரபி ஆவி 26 செவ்வாய்க்கிழமை (23-7-69)

சுகாதார தளபாடங்கள்
(இலங்கை களிமண் கூட்டுத்தாபனம்)
முகங்கழுவும் பேசின்கள் 22"X15"
ரூபா 112-00
மலகூட இருக்கைகள் 19"
ரூபா 65-00
குறைந்த விலை
கவர்ச்சிப்புகளே உண்டு.
உங்கள் தேவைக்கு முந்துங்கள்!
சிலோன் மேர்ச்சன்ட் லிமி.,
ஆஸ்பத்திரி வீதி - யாழ்ப்பாணம்
போன்: 234

மாவிட்டபுரம் ஆலயப்பிரவேச விவகாரம்:

சமரச முயற்சிகள் தோல்வி; 24மணிநேரம் சத்தியாக்கிரகம்

குருநாகலிலிருந்து மேலதிக பொலிஸ் வருகை

"நிமிஷத்துக்கு நிமிஷம் நிலைமையை அவதானிக்கிறோம்"

—அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், செவ்வாய்

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக எடுக்கப்பட்ட சகல சமரச முயற்சிகளும் பயனில்லாமல்போனதால், நிலைமை மிக மோசமான கட்டத்தை அடைந்திருப்பதாகவும் இன்று காலையிலிருந்து நிமிஷத்துக்கு நிமிஷம் நிலைமையை அவதானித்து, அதைக்கொண்டு சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுமென்றும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவும் வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் நேற்றிரவு தெரிவித்தனர். சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் புனைமதிக்குப் பங்கம் விளைக்கும் எவர் மீதும் நடவடிக்கை எடுப்பதும்தான் பொலிசாரின் கடமை என்று திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

மாவிட்டபுரத்தில் இன்று பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்படுகிறது. குருநாகலிலிருந்து 100 பொலிசார் வருகின்றனர். இன்று காலையிலிருந்து 24 மணி நேரமும் ஹரிஜனர் சத்தியாக்கிரகம் நடைபெறுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல் கிடைத்திருக்கிறது.

சகல முயற்சிகளும் பயனளிக்கவில்லை

மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தில் முன்னாள் போடப்பட்டுள்ள முட்கம்பி வேலித் தடையை அகற்றுவதற்கும் தொண்டர் படையைக் கலைத்துவிடுவதற்கும் கோயில் நிர்வாகிகள் ஒப்புக்கொண்டால் ஹரிஜனர்களின் சத்தியாக்கிரகத்தை நிறுத்திவிடலாமென்றும் ஓர் இணக்கமாக கோயிலுக்குள் ஹரிஜனர் உட்செல்லக்கூடாது தாங்கள் கவனித்துக்கொள்வதாகவும் அரசாங்க அதிபர் வடபகுதி பொலிஸ் அதிபர் முதல் ஆகில இலங்கை இந்துமாமன்றம், இந்து சமய விவகார ஆலோசனைச் சபை ஆகியவைகளின் பிரதிநிதிகளும் மற்றும் தமிழர

(6 ம் பக்கம் பார்க்க)

தடை செய்பவர்கள் மீது நடவடிக்கை

பிரதமர் உத்தரவு

கொழும்பு, திங்கள்

மாவிட்டபுரத்தில் ஆலயப்பிரவேசத்துக்குத் தடையாக இருப்பவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படியும் சமூக ஏற்றத்தாழ்வொழிப்புச் சட்டத்தைத் தீவிரமாக அமுல் நடத்தும்படியும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பிரதமர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

மக்கள் பிரதிநிதிகள் சபையில் கம்லா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா இன்று கேட்ட ஒரு கேள்விக்கு பிரதமரின் சார்பில் பதிலளித்த ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஆலயப் பிரவேசம் செய்யும் ஹரிஜனர்களுக்குப் பொலிஸ் பாதுகாப்பளிக்க பிரதமர் ஏன் தவறிவிட்டார் என்று திரு. பண்டாரநாயகா கேட்டிருந்தார்.

அரசாங்க அதிபருக்கு ஆதீனகர்த்தா பதில்

மாவட்டபுரம், செவ்.

நேற்றுக்காலை மாவிட்டபுரம் ஆதீனகர்த்தாவின் இல்லத்தில் அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெற்ற உயர்தர மாநாட்டின்பின் ஆதீனகர்த்தாவுக்கு அரசாங்க அதிபர் அனுப்பியிருந்தவடிதத்துக்கு நேற்றுகாலை ஆதீனகர்த்தா பதில் அனுப்பியிருந்தார். திருவிழா முடியும் வரை "ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக எதுவித பதிலும் அளிக்கமுடியாது"

(6-ம் பக்கம் பார்க்க)

ஆலயப் பிரவேசத்துக்கு திகதி குறிப்பிட மறுப்பு

யாழ்ப்பாணம், செவ்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் ஏற்பட்டுள்ள நிலைமைபற்றி ஆராய்ந்து சுமுகமான தீர்வுகாண நேற்றுக்காலை ஆதீனகர்த்தாவின் இல்லத்தில் நடந்த உயர் அதிகாரிகளின் மாநாடு எவ்வித முடிவும் எடுக்கப்படாமல் கலைந்தது. இம்மகாநாட்டில் கலந்துகொள்ளத் தொண்டர்சபைத் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் மறுத்துவிட்டார்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில், உதவி இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. இலியன் பெரேரா, வட பகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், பி. திரு. தர்மலிங்கம், இந்து மாமன்றப் பிரதிநிதிகள் திருவாளர்கள் சிவகுப்பிரமணியம், எம். வைரமுத்து, சுந்தரேசர், சின்னத்தம்பி, எஸ். பொன்னையா, இந்து கலாசார விவகார ஆலோசனைச் சபை அங்கத்தவர்களும் கலந்துகொண்டனர்.

தற்போதுள்ள நிலைமையில் ஹரிஜனர்களுக்கு ஆலயத்தைத் திறந்துவிடவேண்டுமென அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

உபயகாரர்கள், பொதுமக்கள் தம்மிடத்தில் ஆலயத்தைத் திறந்துவிடத் தயாரென ஆதீனகர்த்தா ஸ்ரீ துரைச்சாமிக் குருக்கள் தெரிவித்தார்.

ஆலயத்தைத் திறந்துவிட்டதாக அறிவித்தாலே போதுமென்றும், ஹரிஜனர்கள் உள் செல்லமாட்டார்கள் என்றும் உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் கூறினார்.

திருவிழாக்கள்முடிந்தபின் ஆலயத்தைத் திறந்துவிடுவதற்கு ஒரு நாளை தெரிவிக்குமாறு அரசாங்க அதிபர் கேட்டுக்கொண்டார்.

உங்களால் இயன்றளவு முயற்சிசெய்து பாருங்கள் என உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் துரைச்சாமி குருக்களிடம் கூறினார்.

துரைச்சாமி குருக்களிடமிருந்து முடிவை அறியத்தக்கு நண்பகல் ஒரு மணிவரை எல்லோரும் காத்திருந்தனர். சுமார் ஒரு மணியளவில் திருப்பிவந்த ஸ்ரீ துரைச்சாமி குருக்கள் முடிவைத் தெரிவிக்கத் தனது மகனை வருவாரெனக் கூறிவிட்டுச் சென்றுவிட்டார். இதன்பின் 1 மணிவரை காத்திருந்தவர்கள் திரும்பிச்சென்றுவிட்டனர்.

(6ம் பக்கம் பார்க்க)

மரண அறிவித்தல்

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திரு. வே. த. சுன்னாத்தினம் அவர்களின் மகன் திரு. வி. வேகானந்தன் அவர்கள் காலமானார். இவர் திரு. க. பூபாலசிங்கம், திரு. க. விக்னேஸ்வரன், திரு. க. புவனேஸ்வரன், திரு. க. குணேஸ்வரன், மனோரஞ்சிதம் ஆகியோரின் சகோதரரும் திரு. த. த. ஞானம், திரு. த. நாகேஸ்வரன், திரு. செ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும்ஆவர்.

மரணச்சடங்கு 23-7-69 காலை 10 மணிக்கு கோண்டாவில் கிழக்கில் நடைபெறும்.

893

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனுக்கு
அன்பும் அருளுமே ஒரு
வருக்குப் பூரணத்து
வத்தை ஏற்படுத்த வல்
லவை.
—சுவாமிவிவேகானந்தர்

சமுநாடு

The Leading National Tamil Daily
Telephone: 389.

மாதிகையைக் கிழவருமும்
ஆடி மாதம் 8-ந்திகதி
(23-7-68)

இனி என்ன?

"மாவட்டசபைகள் அமைக்கும் உத்தேசத்தைக் கைவிட்டுவிட்டேன்" என்று பிரதமர் திரு. டட்லி சேனநாயகா, மக்கள் பிரதிநிதிகள்சபையில் தெட்டத் தெளிவாக அறிவித்த பின்னரும் இம்மாசனப் பிரசங்கத்துக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணையை ஆதரித்து தமிழரசுக்கட்சியினர் வாக்களித்திருக்கின்றனர். என்ன செய்வது ஏது செய்வது என்று அங்காய்க்க வேண்டிய மிகச் சங்கடமான சமயத்திலும் இம்மாசனப் பிரசங்கத்தை ஆதரித்து வாக்களித்ததற்காக தமிழரசுக்கட்சியினரின் தீர்க்க தரிசனத்தைப் பாராட்ட வேண்டும்.

மாவட்டசபைகள் அமைப்பதுதான் தமிழ் மக்களின் இலட்சியம் ஆகில. இது தமிழரசுக் கட்சியின் இலட்சியமுமல்ல. தமிழ் மக்கள் தமது சொந்த நாட்டிலேயே இரண்டாந்தரப் பிரஜைகளின் நிலைக்குத் தள்ளப்படுவதைத் தடுக்க வேண்டுமென்பதும் இந்நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரத்தை சகல மக்களும் அனுபவிக்க வேண்டுமென்பதும் இந்த நாட்டிலுள்ள இதர சமூகங்களுடன் தமிழ்ச் சமூகமும் சமகாலமுடன், சமவுரிமையுடன், சமவாய்ப்புடன் வாழ வேண்டுமென்பதும்தான் தமிழரசுக்கட்சியின் இலட்சியமும் இதர தமிழ்ப் பிரதிநிதிகளின் இலட்சியமுமாகும். இந்த இலட்சியத்தை அடைவதற்கு சமஷ்டி ஆட்சி அமைப்பு முறைதான் சரியான வழி என்றும் இன்றைய நிலையில் சமஷ்டி ஆட்சி அமைப்பை ஏற்படுத்த முடியாவிட்டாலும் மாவட்டசபைகள் மூலம் ஓரளவு இதற்கான வழி பிறக்கலாமென்பதும் தமிழரசுக்கட்சியினரின் நோக்கம். எனவே தமிழ்மக்களின் உரிமைகளைப் பெறுவதற்கான இலட்சியத்தை அடைய சமஷ்டியும் அதற்கு முன்னோடியாக மாவட்டசபைகளும் சில வழிகள் என்பதே தமிழரசுக்கட்சியின் நோக்கமே தவிர, சமஷ்டியும் மாவட்டசபைகளும் இலட்சியமல்ல என்பது தெளிவு. இந்த வழிமுறைகள் இப்போது சாத்தியமாக இல்லாவிட்டால், தமிழரின் உரிமைகளைப் பெறுவதற்கான இலட்சியத்தில் வேறு வழிகளைக் கையாள்வதுதான் விவேகம்.

தமிழ் மக்களை தமிழரசுக்கட்சியினராகவும், தமிழரசுக் கட்சியினரைப் பதவிக்கு வரவும் பெரும்பான்மை மக்கள் மத்தியில், அரசியல் காரணங்களை ஆடிப்படையாக வைத்து, சிலர் வெறுப்பையும் குரோதத்தையும் விதைத்து, பிரசாரம் செய்துள்ளனர். இதன் விளைவுதான் "மாவட்டசபைகளை மக்கள் விரும்பவில்லை. மக்கள் விரும்பாத எதையும் கலைத்த மாக திணிக்க நான் விரும்பவில்லை. இதனால் தான் மாவட்டசபைகள் மசோதாவைக் கைவிட வேண்டியுள்ளது" என்று பிரதமர் கூறியதன் அர்த்தம் "மக்கள்" என்பது யார்?

தமிழரசுக்கட்சியினர் தங்களைப்பற்றி பெரும்பான்மைச் சமூகத்தவர் மத்தியில் ஏற்படுத்தியுள்ள தவறான அபிப்பிராயத்தை நீக்க தீவிர முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். பௌத்தமத பீடத் தலைவர்களான கலாநாயகதேரர்களையும், பெரும்பான்மைச் சமூகத் தலைவர்களையும் தனிப்பட்ட முறையிலாவது அடிக்கடி சந்தித்துப் பேசி, சிங்கள மொழி மீதோ சிங்கள மக்கள்மீதோ தமிழர்களுக்கு வெறுப்போ துவேஷமோ கிடையாது என்பதை அவர்களுக்கு உணர்த்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

மாவட்டசபைகள் அமைக்கப்படுவதை தமிழ் மக்களில் ஒரு பகுதியினரும் எதிர்த்தனர். இப்போது மாவட்டசபைகள் அமைக்கப்படும் உத்தேசம் கைவிடப்பட்டுள்ளது. இனி என்ன? மாவட்டசபைகள் வேண்டும் என்றவர்களும் வேண்டாம் என்றவர்களும் சேர்ந்து தமிழ்மக்களின் இழந்த உரிமைகளைப் பெறவும் எஞ்சியிருக்கும் உரிமைகளைப் பாதுகாக்கவும் ஒரு திட்டம் வகுத்து செயல்படுத்த முன்வர வேண்டும். அடுத்த தேர்தல் அல்லது வேறுள்ள பிரச்னை தமிழ் மக்கள் உரிமைகளுடன் நிம்மதியாக வாழ வழி என்ன என்பதுதான் ஒன்றுதான் முக்கியமான பிரச்னை.

"சிறுபான்மை இனத்துள் ஒரு சிறுபான்மையா?"

யாழ்ப்பாணம், செவ். 'தமிழ் சமூகம் ஒற்றுமையாக இருக்கவேண்டுமாயின் தீண்டாமை என்னும் கொடிய நோய் நீங்கவேண்டும். தமிழினமே சிறுபான்மையினமாய் இருக்கும் பொழுது இன்னுமொரு சிறுபான்மையினமா?'

இவ்வாறு சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி மாநாட்டில் வழக்கறிஞர் திரு. வி. இராசநாயகம் பேசுகையில் கூறினார்.

வாழ். மாநகரசபைமண்டபத்தில் முன்னணித் தலைவர் திரு. எஸ். கதிரவேலு தலைமையில் நடைபெற்ற இந்த மாநாட்டில் சில ஆசிரியர் தலைவர்களும் சமயப் பெரியார்களும் கலந்து கொண்டனர்.

முன்னாள் செ. சின்னத்தம்பி பேசுகையில், 'சாதியாக்கிரமம் என்பது கடைசி ஆயுதம். தேர், தீர்த்தம் முடிந்ததன்பின்பு சாதியாக்கிரமம் செய்வது பொருத்தமாகும்' என்று கூறினார்.

முன்னாள் செனட்டர் திரு. ஜி. நல்லையா பேசுகையில், 'இந்தப் பிரச்னை இன்றைக்கு 50 வருடத்துக்கு முன் பிறந்து நிலவிவரும் பிரச்னையாகும்' என்று கூறினார்.

திரு. ஸ்ரீதரன் பேசுகையில், ஆலயத்தினுள்ளே எல்லா மக்களும் சென்று வணங்க வேண்டுமென்பது உண்மை. பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டுமாயின், சாதியாக்கிரமம் தொடர்ந்து கடைபெற்றுக்கொண்டிருக்கட்டும். சமரசானப் பேச்சுவார்த்தைகள் தொடர்ந்து நடைபெறட்டும். பிரசார மூலம் அறிவுப்புரட்சியை உண்டாக்கவேண்டும். அமைதிக்கீர்தனம் இசைவுபடம் பிடித்துச்சென்றது அமெரிக்காவில் நடத்திவரும் சதுப்பரி, வெள்ளையரி என்னும் பிரச்னையைச் சரியென்று வலியுறுத்துவதாக விடுக்கலாம்' என்று கூறினார்.

செனட்டர் திரு நடராசா பேசுகையில், 'தீவிர முயற்சியில் இறங்கக்கூடாது. இறங்கினால் விடவும்கூடாது. குருக்களின் மனதை மாற்றலாம். ஆனால் அந்த ஊரின் மனதை மாற்ற முடியாமலிருக்கிறது. எவ்வளவு விரைவாக இந்தப் பிரச்னை தீர்க்கப்படுகிறதோ அவ்வளவு விரைவாக தமிழ்ச் சமூகம் நலமடைவதுடன் வாழும் என்றதில் ஐயமில்லை' என்று கூறினார். [ந. நி]

இன்றைய பலன்

(23 - 7 - 68)
ஆடி மீ 8 உ
செவ்வாய்க்கிழமை

திதி — திரயோதசி பி. ப. 3.53மேல் சதுர்த்தசி.

நட்சத்திரம் — திருவாதிரை.

ராகுகாலம் - 3-01 4-31.

எமகண்டம் - 10-31—12-01.

இன்று பிறந்தவர்களுக்கு:-பதவி உயர்வுக்குப் பக்குவமான காலம் சிலருக்குப் புதிய தொழில் கிடைக்கலாம். பணம் பலவழிகளிலும் செலவாகும். நற்தொழில் ஆதரவு நல்சமயத்தில் கிடைக்கும். சிலருக்கு வேதாந்த விடயங்களில் ஈடுபாடு ஏற்படலாம். இவ்வாண்டு புதுமனைகட்டுவதற்கு மிகவும் பொருத்தமானது. தனம் சம்பந்தமான சோதனைகள் ஏற்படலாம். பாதுகாப்பாக நடந்து கொள்ளவும். தெய்வ நம்பிக்கை சிறந்த துணையாகும்.

மேஷம்- வித்தை பலிதம், விருந்தும் கிடைக்கும்.

ரிஷபம்- கைத்தொழில் விருத்தி, காரிய ஜெயம்.

மிதுனம்- பிரிந்தவர் உறவு பெருமையும் உண்டு.

கடகம்- விவாத நஷ்டம், வீண்பயணம் கேட்டல்.

சிம்மம்- மழலை சொல் கேட்டல், மனநிம்மதி.

கன்னி-அமைதிக்குப்பங்கம், பொருள்விரயம்.

துலாம்-உள்ளக் கிளர்ச்சி, உலகைப் பெருக்கு.

விருச்சிகம்- அறிவுத் தாகம், முயற்சிவெல்லும்.

தனுசு-பலமை சீறும், சிக்கலைத் தவிர்.

மகரம்- அன்புக்கரம் அணைக்கும், ஆசை நிறைவேறும்.

கும்பம்-குழறும் நெஞ்சம், குறைகேட்டல் நிறுவும்.

மீனம்- எதிர்பாராத விளைவு, ஏமாற்றம்.

ஜோதிடக்கலாநிதி
திருமலை வேலாயுதபிள்ளை

ஆலய உற்சவங்கள்

ஆடிபூரத்திருவிழா

காரைநகர், திங்கள்

காரைநகர் கணேசாடு ஸ்ரீகும்பநாயகி முத்துமாரி அம்மன் கோவில் ஆடிபூரத் திருவிழா 28-ம்திகதிஞாயிற்றுக்கிழமை நடைபெற இருக்கிறது. பகல் அபிஷேகமும் விசேஷ பூசையும் மாலை அம்பாள் வீதிவலம் வருதலும் நடைபெறும். இரவு பிரபஸ்ரீ சி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் 'தேவியின் மகிமை' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்துவார்.

ஃ

கிளிநொச்சி, திங்கள்

இரணைமடு கன்னிமாரம்பிகை அம்பாள் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் ஆடிப்பூரத் திருவிழாவில் சமயச்சொற்பொழிவு, கலை நிகழ்ச்சிகள் இடம்பெறஇருக்கின்றன.

ஃ

காரைநகர் அரசடிக்காடு சதிர்காம சுவாமி மகோற்சவம் 25-ந் ஆரம்பமாகி 16 தினங்கள் நடைபெற இருக்கிறது. அடுத்தமாதம் 24-ந் நாளில் இரதோற்சவமும் மறுதினம் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

ஃ

சங்காபிஷேகம்

கொழும்பு, திங்கள்

இலங்கைப் பல்கலைக்கழக குறிஞ்சிக்குமரன் கோவில் மண்டலாபிஷேகப் பூர்த்தி நவராத்திர சதசங்காபிஷேகம் புதன்கிழமைநடைபெற இருக்கிறது.

ஃ

சித்திர இரதத்திருநாள்

கொழும்பு சம்மாங்கோடு ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி சித்திர இரதத்திருநாள் அடுத்தமாதம் 5-ம் திகதி காலை 6 மணிக்கு மேல் மகேஸ்வர பூசையுடன் ஆரம்பமாக இருக்கிறது.

அமைச்சர் மறுப்பு

கொழும்பிலிருந்து. திங்கள்

புடவை விலைகளை உயர்த்து மாறும், கூப்பன் முறையில் புடவை விநியோகத்தை ரத்துச்செய்யுமாறும் சலுகை விநியோபாபனத்தார் கேட்டுக் கொண்டதை அமைச்சர் நிராகரித்துவிட்டார். இலங்கையில் உற்பத்தியாகும் துணி, இலங்கை மக்களின் பாவிப்புக்குப் போதாதிருப்பதாகவும் எனவே புடவை விநியோகத்தில் கூப்பன் முறை தொடர்ந்திருக்க வேண்டியது அவசியமெனவும் அமைச்சரைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மக்கள் தட்டுப்பாடின்றிப் புடவை பெற்றுக்கொள்ள வசதியாகச் சலுகை விநியோபனம் இவ்வருடம் 7 கோடி ரூபா பெறுமதியான துணி வகைகளை இறக்குமதிசெய்துள்ளது.

புதிய ஊழியர் முக்கிய பிரச்னை

யாழ்ப்பாணம், செவ்

அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் 8வது ஆண்டுப் பொதுக்கூட்டம் இம்மாதம் 31ந் கேதி கொழும்பு சரஸவதி மண்டபத்தில் நடைபெறும்.

புதிய ஊழியர் விவகாரம் இக்கூட்டத்தில் முக்கிய பிரச்னையாக இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

[5-ம் கலத் தொடர்ச்சி]

நியாலவ எக்காலத்துக்கும் அழித்துவிட்டதென்று நம்பினோம். இப்பொழுது டி. டி. டி.யுடன் நன்றாகப் பழகி உறவுகொண்டாட ஆரம்பித்துவிட்டபடியால் மறுபடியும் மலேரியா தலைகாட்டுகிறது.

— வழிப்போக்கன்

நாட்டிலும் நகரிலும்

அடபாவி, நுளம்புகளா! உங்களுக்குமா இந்தப் பைத்தியம் பிடித்துவிட்டது! ஆண்களாம் நாங்கள் இதற்கு அடிமைகள் என்று இதுகாறும் நினைத்தோம். இப்பொழுது நீங்களும் ஆண்களுக்குப் போட்டியாக வந்துவிட்டீர்களாமே! பேஷ், பேஷ்! நன்றாக வருகிறீர்கள். அனுபவித்தால்தானே அறிவு வரும். என்ன இருந்தாலும் இப்படி உங்களுக்கு புத்தி போதிக்கும் என்று நாங்களிலும் எண்ணவில்லை. உங்களாக பரிதாபப்படும் அதே சமயத்தில் உங்களுக்கு எனக்கு சந்தோஷமாகவும் இருக்கிறது. நீங்கள் பெண்களைத் துரத்திக் கொண்டு திரிந்து அவர்களைக் கடிப்பதில் காலத்தை கழித்துக்கொண்டிருந்தால் ஆண்களாகிய எங்களுக்கு சிறிது ஆறுதல் தானே! ஏற்கனவே பெண்களிடமிருந்தும் உங்களிடமிருந்தும் கடி வாங்கி கஷ்டப்படும் எங்களுக்கு இது ஒரு பெரிய வரப்பிரசாதம். ஆனாலும் பெண்களைத் தொடர்ந்து துரத்துங்கள், கடியுங்கள், நன்றாக கடியுங்கள்! எங்களை மட்டும் விட்டுவிடுங்கள்!

ஃ ஃ ஃ

சில வகை நுளம்புகளுக்கு பெண்களில் ரொம்பப் பிரியமாம். நுளம்பினம் பெண்களிலல்ல, நமது மானிடப்பெண்களில். அவர்களுடைய தேகத்திலிருந்து வெளிப்படும் ஏதோ ஒரு வகை கண்ணுக்குத் தெரியாத வஸ்து நுளம்புகளை கவர்கிறதாம். ஆண்களிலும் பார்க்க பெண்களைத் தான் அவை விரும்பிக் கடிக்கின்றனவாம்.

இந்த உண்மையைக் கண்டுபிடித்து வெளியிட்டவர் அமெரிக்கப் பல்லைக்கழகம் ஒன்றிலுள்ள ஆராய்ச்சி நிபுணர் ஒருவர்.

இச்செய்தியைக் கண்டவுடனே மேற்படி நுளம்புகளில் இரண்டொன்றை இங்கு இறக்குமதி செய்யலாமா என்று தோன்றுகிறது. அவை பல்கிப்பெருகியதும் எமது பெண்களையே சுற்றி வளைத்துக்கொண்டிரிய, ஆண்களாகிய நாங்கள் நிம்மதியாக வாழலாம். நுளம்புகளைக் கண்டதும் துரத்துவதில் ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கு நம்மைத் தொந்தரவு செய்ய அவகாசம் கிடையாது. எனவே இரு வகைத் துன்பங்களிலிருந்தும் தவறியவர்களாகிறோம்.

இப்படி எழுதுவது சுத்த சுயநலப்போக்கைக் காட்டுகிறது என்று பெண்கள் குறை கூறக்கூடும். 'பெண்களுக்கு மட்டும் மலேரியா வருவதா, ஆண்கள் தப்பிவிடுவதா?' என்று அவர்கள் புறுபுறுக்கலாம். ஆனால் மேற்படி பெண்களை விரும்பும் நுளம்புகள் மலேரியாக் கிருமிகளைக் கொண்டுசெல்லும் 'அனோபிலிஸ்' சாதி என்று கூறவில்லையே!

ஃ

மலேரியாவைப் பற்றி எழுதலையில் இக்கொடியநோய் மீண்டும் இங்கே தலைதூக்கித் தாண்டவமாடக்கூடுமென்று உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை விடுத்துள்ளதாம். 1935ம் ஆண்டளவில் மலேரியா இங்கே கொள்ளைநோயாகப் பரவிப் பல்லாயிரக்கணக்கான உயிர்களைக் குடித்தது. பெண்களை மட்டுமல்ல, ஆண்களுந்தான்! அப்பொழுது புதிதாகக் கண்டுபிடித்த டி. டி. டி. மருந்து, கொள்ளை நோயைத் தடுத்தது. மலே

[4-ம் கலத் தொடர்ச்சி]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செக்கோஸ்லாவாக்கியாவிலிருந்து சோவியத்துருப்புகள் வெளியேற்றம் ஒத்திவைப்பு

பிராக், ஜூலை 23

செக்கோஸ்லாவாக்கியாவிலிருந்து சோவியத்துருப்புக்கள் இன்னும் முற்றுகவெளியேறவில்லை. இன்று தான், துருப்புகளின் கடைசிப் பிரிவுகள் செக்கோஸ்லாவாகியாவை விட்டுச் செல்வதாக இருந்தது. ஆனால், அத்துருப்புகள் இப்போதுதாம் வெளியேறும்காலத்தை இன்னும்நான்கு நாட்களுக்குஒத்திப்போட்டுள்ளன. துருப்புகளின் மெதுவான நடமாட்டமே இந்த தாமதத்துக்குக்காரணமாகும். ஒரு சோவியத்பிரிவு, பிராக்கிலிருந்து சுமார் 55 மைல் தூரத்திலேயே இன்னும் இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

செக்கோஸ்லாவாக்கிய தலைவர்கள், ரஷ்யத்தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துமாஸ்கோசெல்ல மாட்டார்கள் என்று செக். பத்திரிகை ஒன்று அறிவித்துள்ளது.

செக். நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மாற்றங்கள் பற்றிவரைவாளது அக்கறை கொண்டிருந்தால், அவர்கள் அங்கு நேரில் விஜயம் செய்து அவற்றை அறிந்துகொள்ளலாம் என நாம் அது குறிப்பிட்டுள்ளது.

செக்கோஸ்லாவாக்கியாவில் உள் விவகாரங்களில் நேரடிக்குறுக்கீடு நடக்குமேயானால், புதிய கருத்திரகொள்கைக்கு அது வீழ்ச்சியையே ஏற்படுத்துமெனவும் அப்பத்திரிகை கவலை தெரிவித்துள்ளது.

ரஷ்யப் பிரதமர் கொஸிஜினிடம் பேட்ராண்ட் ரஸல் வேண்டுகோள்

'செக். நாட்டின்மீது இராணுவ நடவடிக்கை வேண்டாம்'

பிரிட்டிஷ் பேரறிஞரும், சமாதான ஞானியுமான திரு. பேட்ராண்ட் ரஸல், செக்கோஸ்லாவாக்கியா மீது இராணுவ நடவடிக்கை எதையும் எடுப்பதில்லை என்று பகிரங்கமாக உறுதியளிக்கும்படி, ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினிடம் வேண்டிக் கொண்டுள்ளார்.

உலக அமைதி பாதிக்கப்படாமலிருப்பதற்கு இத்தகைய உறுதிமொழி யொன்றை ரஷ்யப்பிரதமர் திரு. கொஸிஜின் வெளியிட வேண்டியது அவசியம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பிய கம்யூனிஸ்ட் மாநாடு ரத்துச் செய்யப்பட்டது

ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சிகளின் மாநாட்டை நடத்தவிருந்த பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சி, இப்போது அதை ரத்துச்செய்துள்ளது. பிரெஞ்சுக் கம்யூனிஸ்ட் கட்சி விடுத்திருந்த அழைப்புக்கு 14 நாடுகள் சம்மதம் தெரிவித்திருந்தன. செக்கோஸ்லாவாக்கியாவில் புதிய அரசியல் நிலைமையற்றி ஆராய்வதே மாநாட்டின் நோக்கமாயிருந்தது.

செக்கோஸ்லாவாக்கியாத் தலைவர்கள், ஐரோப்பிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர்களுடன் தனித்தனியே பேச்சுவார்த்தைகள் நடத்த விருப்பம் தெரிவித்திருந்ததைத்தொடர்ந்தே, உத்தேச ஐரோப்பிய கம்யூனிஸ்ட் மாநாடு ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸுடன்சமரசம்காண மலேஷியா விருப்பம்

ஆனால், பிலிப்பைன்ஸ் அதிபர் மலேஷியாவுக்கு எச்சரிக்கை

கத்மாண்டு, ஜூலை 22

மலேஷியாவுக்கும், பிலிப்பைன்ஸுக்கும் இடையேயான தகராறு, எதிர்ப்பு நடவடிக்கை எதுவுமின்றிச் சமரசமாகத் தீர்க்கப்படுமெனத் தாம் நம்புவதாக மலேஷியப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஹ்மான் நேற்று கத்மாண்டுவில் தெரிவித்தார்.

மலேஷியப் பிரதமர், தற்போது நேபாளத்தில் விஜயஞ்செய்துவருகிறார்.

வட போர்னியோப் பிரதேசமான சபாவுக்கான தனது உரிமையை மலேஷியா மறுப்பதாகப் பிலிப்பைன்ஸ் புகார் செய்துள்ளது. இதன் காரணமாக, மலேஷியாவிலுள்ள தனது தூதுவரையும் அது திருப்பி அழைத்துள்ளது.

மலேஷியாவுக்கும் பிலிப்பைன்ஸுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்தத் தென்கிழக்காசியக் கூட்டைச் சேர்ந்த எந்த நாடாவது முன்வந்தால், அதனை ஏற்றுக்கொள்ள மலேஷியா, தயாராகவிருப்பதாக மலேஷியத் துணைப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஸாக் சோலராம்பூரில் கோரியுள்ளார்.

எச்சரிக்கை

ஆனால் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி திரு. மார்க்கோஸ் மலேஷியாவுடன் நட்புறவு வைத்துக்கொள்ளவே பிலிப்பைன்ஸ் விரும்பினாலும், அதன் கௌரவத்தைப் பாதிக்கும் நடவடிக்கை எதையும் அது வரித்துக் கொண்டு சும்மா இருக்கமாட்டாதென்று மலேஷியாவுக்கு எச்சரித்துள்ளார்.

இஸ்ரேல்-ஜோர்தான் துப்பாக்கி சண்டை

டெல்அவிவ், ஜூலை 22

இஸ்ரேல் துருப்புகளும், ஜோர்தான் துருப்புகளும் ஜோர்தான் ஆற்றுக்குக் குறுக்கே மீண்டும் துப்பாக்கிப்பிரயோகத்தில் நேற்று ஈடுபட்டதாக டெல்அவிவ் செய்திகள் தெரிவித்துள்ளன

ஜோர்தான் துருப்புகளே முதலில் சுட்டதாகவும், அதைத் தொடர்ந்தே நாம் திருப்பிச் சுட்டதாகவும் இஸ்ரேல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தமது பக்கத்தில் எவ்வித ஆட்சேதமும் ஏற்படவில்லையெனவும் அவை தெரிவித்தன.

இத்துப்பாக்கிச் சண்டை பற்றிய விபரங்கள் எதுவும் இதுவரை தேர்ச்சியாகிய மிருந்து கிடைக்கவில்லை.

செய்மதியும்

கால நிலை முன்னறிவிப்பும்

மாஸ்கோ, ஜூலை 22

கால நிலை அவதானிப்புக்கு ஒரு புதிய சோவியத் செய்மதி உதவுகிறது. இது 'கொஸ்மஸ்-226' என்பதாகும். மாஸ்கோவுடன் நேரடி தொடர்பை வேணும் பிராந்தியத்திற்கூடாக இது செல்லும்போது அண்ட வெளியில் இதன் தொலைக்காட்சிக் கமராக்கள் படம்பிடித்த காலநிலைப் படங்களைப் பூமிக்கு அனுப்புகிறது.

நீர்-வாயு நிலைய அவதான நிலையத்தில் தொலைக்காட்சி சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. படங்களைப் பெறுவதற்கான சாதனமும் உள்ளது. செய்மதியிலுள்ள தொலைக்காட்சிக் கமரா, கால நிலையைப் பகல் வேளைகளில் பதிவு செய்கிறது. வெப்ப வெளிப்பாட்டுப் பொருட்களைக் கண்டுபிடிக்கும் விசேஷ சாதனம் இரவு வேளைகளில் கால நிலையைப் பதிவுசெய்கிறது.

அதேநேரத்தில் செய்மதியிலுள்ள ஒரு கருவி, அட்டலாண்டிக்கைக் கடந்து நாடாவில் பதிவுசெய்கிறது.

நைஜீரிய

சமாதானப் பேச்சுக்கள்

நிஸாம், ஜூலை 22

நைஜர் குடியரசான நிஸாமியில் ஆபிரிக்க ஒற்றுமை ஸ்தாபன நாடுகளின் ஆதரவின்கீழ் நடைபெறும் நைஜீரிய உள்நாட்டுப்போர் சம்பந்தமான சமாதானப்பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

எதியோப்பிய தலைநகரான அடிஸ் அபாபாவில் விரைவில் நடைபெறவிருக்கும் தமது இருதரப்புப் பேச்சுவார்த்தைகளின்போது பேசவிருக்கும் திட்டக்குறிப்புச் சம்பந்தமாகச் சமஷ்டி நைஜீரியத் தலைவர்களும், கிழக்கு நைஜீரியாவான 'பியாஃப்ரா' தலைவர்களும் இங்கு உடன்பாடு கண்டுள்ளனர்.

இங்கு நடைபெறும் நைஜீரிய சமாதானப் பூர்வங்கப் பேச்சுவார்த்தைகளின் போது நைஜீரிய உள்நாட்டுப்போரில் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிப்பது சம்பந்தமான ஆலோசனைகளும் விவாதிக்கப்பட்டன.

அரபு நாடுகள் ஒற்றுமை

ஈராக் உழைக்கும்

பாக்தாத், ஜூலை 22

அரபு நாடுகளின் ஒற்றுமைக்காகப் புதிய ஈராக் அரசாங்கம் உழைக்குமென, அந்நாட்டின் புதிய வெளியுறவு மந்திரி திரு. நாஸர் அல் ஹரி தெரிவித்துள்ளார்.

இவரின் கருத்தின்படி, அரபு நாடுகளுடன் சேர்ந்து ஈராக்கும் முயற்சி செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஈரான், துருக்கி ஆகிய நாடுகளுடன் விசேஷ தொடர்புகளைப் புதிய அரசாங்கம் வைத்துக்கொள்ளுமென்றும் அவர் கூறினார்.

பாகிஸ்தானுக்கு ரஷ்ய ஆயுதங்கள் விற்பனை

சோவியத் தூதரகம் முன்னால் ஆர்ப்பாட்டம்

புதுடில்லி, ஜூலை 22

புதுடில்லியில், பாகிஸ்தானுக்கு ரஷ்ய ஆயுதங்கள் விற்பனை எதிர்த்து வலது சாரிக்கட்சியைச் சேர்ந்த சுமார் 5000 ஆர்ப்பாட்டக்காரர்கள், சோவியத் தூதரகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த 5000 ஆர்ப்பாட்டக்காரர்களையும் சமாளிக்கவந்த 1400 பொலிஸார், அவர்களைக்கலைக்க முற்பட்டபோது ஆர்ப்பாட்டக்காரருக்கும் பொலிஸாருக்குமிடையே மோதல் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களில் 400 பேரைப் பொலிஸார் கைதுசெய்தனர். இவர்களில் டிவி உதவி மேயரும், மற்றும் 5 எம். பி.க்களும் அடங்கியுள்ளனர்.

இதற்கிடையில், இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியும், துணைப்பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயும், பாகிஸ்தானுக்கான ரஷ்ய ஆயுத விற்பனை விஷயத்தில் மக்கள் பொறுமையை இழக்கக்கூடாதென்றும், இந்திய-ரஷ்ய நல்லுறவுக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய நடவடிக்கைகள் எதிலும் இறங்க வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டுள்ளனர்.

ஆயுப்கான் கருத்து

டெஹரான், ஜூலை 22

ஈரான் தலைநகரான டெஹரான் வந்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி ஆயுப்கான், பாகிஸ்தானுக்கு விற்கப்படும் ரஷ்ய ஆயுதங்களினால் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே எவ்வித குழப்பமும் ஏற்படுமெனத் தாம் நம்பவில்லை என்று கூறியுள்ளார்

டெஹரானிலிருந்து ஆயுப்கான் இன்று லண்டன் செல்லவிருக்கிறார்.

மருத்துவ பரிசோதனைக்காகவே ஆயுப்கான் லண்டன் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டபோதும், பாகிஸ்தானுக்கான பிரிட்டிஷ் உதவிகள் பற்றி அவர் பிரிட்டிஷ் அரசாங்க அதிகாரிகளுடன் ஆராய்வார் என விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

லண்டனில்

அமெரிக்கத் தூதரகம் முன்னால் ஆர்ப்பாட்டம்

வியட்னாம் போர் எதிர்ப்பாளர்

லண்டன், ஜூலை 22

மத்திய லண்டனில் நேற்றுச் சுமார் 10,000 வியட்னாம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டக்காரர்கள், 1954ம் வருடத்தைய வியட்னாம் மீதான ஜெனீவா உடன்படிக்கையின் 14வது வருடாந்த தினத்தைமொட்டித் தெருக்களில் ஊர்வலமாகச் சென்றனர். இவர்களில் அநேகர் மாணவர்களாவர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் லண்டனிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தை நோக்கிச் சென்றபோது, பொலிஸாரால் தடைசெய்யப்பட்டனர். தூதரகக் கட்டிடத்தைச் சுற்றிச் சுமார் 1000 பொலிஸார் காவல்புரிந்தனர்.

மாணவர்கள், கற்களை வீசிக் கட்டிடத்தின் ஜன்னல்களை உடைத்தனர். அந்த நடுணத்தில் பொலிஸார் குறுக்கிட்டபோது, இருதராருக்குமிடையே மோதல் ஏற்பட்டது. கட்டிடத்துக்கு மேலும் ஏதும் சேதம் விளைவிக்க ஆர்ப்பாட்டக்காரர்களை விடாது பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

புதிய பங்கிட்டரிசிப் புத்தகம்

உடுவில், திங்கள்

24-வது தொடர்ச்சி பங்கிட்டரிசிப் புத்தகங்கள் ஆகஸ்ட் மாதம் 26-ம் திகதியிலிருந்து பாவனைக்கு வர இருக்கின்றன. 23-வது தொடர்ச்சி பங்கிட்டரிசிப் புத்தகங்கள் ஆகஸ்டுமாத நடுப்பகுதியில் முடிவடைகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் பங்கிட்டரிசிப் புத்தகப் பாவனையாளர் தொகை முன்னைய வருடங்களிலும் பார்க்க சுமார் 12 ஆயிரம் வரை அதிகரித்துள்ளதாம். சுமார் எட்டு லட்சத்துக்கும் அதிகமான பங்கிட்டரிசிப் புத்தகங்கள் இம்முறை இங்கு வழங்கப்பட இருக்கின்றன.

குடியேற்றத்தில் பட்டதாரிகள்

பருத்தித்துறை, திங்.

ஒட்டிசுட்டான், முத்தையன்கட்டு படித்த வாலிபருக்கான குடியேற்றத் திட்டத்தில், இப்பகுதியைச் சேர்ந்த பட்டதாரிகள் உட்பட பல வாலிபர்கள் குடியேறச் சென்றுள்ளனரென்றும், அடுத்தமாத ஆரம்பத்தில் இவர்கள் பயிர்ச்செய்கையை ஆரம்பிப்பரென்றும் தெரிகிறது.

கமதொழிற் பகுதியினர் இவர்களுக்கான சகல வசதிகளும் செய்துவைத்துள்ளதாக அறியப்படுகிறது.

ஊர்காவற்றுறைக்கு மின்சார வசதி

அல்லைப்பிட்டி, திங்

ஊர்காவற்றுறைப் பகுதிக்கு இவ்வருட முடிவுக்குள் மின்சார வசதி கிடைக்கலாமெனத் தெரிகிறது. இதற்கான பூர்வாங்க வேலைகளை மின்சார இலாகாவினர் இங்கு ஆரம்பித்துள்ளனர். நாரந்தனை, வேலணை, பங்குடாதீவு ஆகிய இடங்களுக்கும் இம் மின்சார வசதி விஸ்தரிக்கப்படுமாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர் மலர்

காந்திஜி கட்டுரை போட்டி

இந்தியா சென்றுவர மாணவர்க்கு ஒரு சந்தர்ப்பம்

இந்தியாவில் ஒருமாதம் சுற்றுப்பயணம் செய்ய மாணவர்க்கு ஒரு சந்தர்ப்பம். காந்திஜி நூற்றாண்டு விழாச்சபையினர் இந்தச் சந்தர்ப்பத்தை அளிக்கின்றனர். உலகரீதியில் கட்டுரைப்போட்டி ஒன்றை நடாத்தி இவர்கள் இந்தப் பரிசை அளிக்கின்றனர்.

16—24 வயதுக்குட்பட்ட வெளிநாட்டு மாணவர்கள் [இலங்கைஉட்பட] இந்தப்போட்டியில் பங்கு பற்றலாம். "காந்திஜியும் மனித விமோசனமும்" என்றதலைப்பில் ஆங்கிலத்தில் 8,000 சொற்களுக்கு மேற்படாமல் கட்டுரை அமையவேண்டும். கட்டுரை அனுப்பவேண்டிய முடிவு திகதி: 31-1-1969. போட்டி முடிவுகள் 15-8-69ல் அறிவிக்கப்படும். கட்டுரைகள் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு தபாலில் அனுப்பிவைக்கவேண்டும்.

குறிப்பு: 24 வயதுக்கு மேற்பட்டோருக்கு வேறு பிரிவாகக் கட்டுரைப் போட்டி நடாத்தப்படுகிறது.

நடுக்கடலில் உதைபந்தாட்டம்!

கடலில் 'செவ்' ஆட்டம் ஆடப்படுகிறது. எதிராக ஆடுபவர் எத்தனையோ கிலோமீட்டர் [தூரத்திலிருந்தாலும் அவருடன் வாஞ்லி மூலம் தொடர்பு கொண்டபடியே ஆட்டத்தைத் தொடரலாம். 'சைன வெட்ஸ்கா ஸாருசியா' போர்க்கப்பல் பிரிவினரால் மிகவும் இம்முறையைக் கடைப்பிடிக்கின்றனர். ஆனால், சமுத்திரத்தின் நடுவே உதைபந்தாட்டம் ஆடுவது முடியுமானதா? ஆம், முடியும்! இவ்வருடத்தில் முதற்தடவையாக கடல் நடுவே உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்றினை நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. கப்பலின் மேல் தளம் போட்டிக்குப் பயன்படுத்தப்படும். பந்து கடலினுள் விழாதபடி சுற்றிவர வலைகள் இழுத்துக் கட்டப்படும். போர்க்கப்பல் பிரிவு மாலுமிகளிடையே இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி பெருத்த ஆர்வத்தை அளித்துள்ளது.

ஒருபடி உயர்வோமா—7

பேச்சு

கணேஷ்

எவ்வளவுக்கெவ்வளவு யோசித்து, ஆலோசனை செய்து பேசுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு நமது மதிப்பு உயரும், வளரவும் வளரும், பெருமை பெருகும்.

பேச்சு கனிவுள்ளதாக சுவையுள்ளதாக இனிமையானதாகவிருக்கவேண்டும். இத்தகும் பேச்சால் பலரைக் கவரமுடியும்; பலர் ஆதரவை நாம் தேடிக்கொள்ள முடியும்.

யாரையும் வினாவைப் புண்படுத்தாத வகையில் விஷயத்துடன் அரித்தத்துடன் அளவுடன் பேசவேண்டும். அப்போதுதான் பேச்சினால் நாம்பயன்பெறமுடியும்.

'கனியிருக்கக் காய்கவர்தற்று' என்ற வள்ளுவரின் எச்சரிக்கை நம் உள்ளத்தில் எப்போதும் என்றும் நிலைத்துநிற்க வேண்டும். சொல்லதமாக இருக்கவேண்டும். இதனால் பலரை நம் வயப்படுத்தலாம். ஆறுதலான பேச்சால் பலருக்கு தேறுதல் அளிப்போம். எடுத்துக்கொண்ட விஷயத்தை எவ்வளவு கருக்கமாக, தெளிவாக, சிறப்பாகக் கூறமுடியுமோ அவ்வளவு சுருக்கமாக, தெளிவாக சிறப்பாக நாம் கூற பயிற்சி பண்ணிக் கொள்ளவேண்டும். இவ்வித பயிற்சியினால் நமக்கென ஒரு தனியான இடத்தைத் தேடிக்கொள்ளலாம். நமது உயர்வுக்கு இவ்வித பயிற்சி நன்கு உதவும்.

வளவளா என்ற அர்த்தமில்லாமல் உளறுபவர்களுக்கு அதிக மதிப்பு இருப்பதில்லை. பிறருக்கு அலுப்புத் தட்டுமளவுக்கு வெறுப்பூட்டும்வகையில் நாம்பேசுவதை முடிந்தவரை தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

இவ்விதம் சிறந்த முறையில் பேசுவதாக நாம் எவ்வளவோ காரியங்களைச் சாதிக்கலாம். நிதானமான பேச்சு நமது நிலையை உயர்த்த உதவும். பிறர் இதனால் புரியும்படியாக விளக்கிக் கொள்ளும்படியாக நாம் பேசுவதால் பலர் நம்மை விரைவில் புரிந்துகொள்ளும்படி செய்துகொள்ளலாம். இதனால் நல்லெண்ணத்தை வளர்த்துக்கொள்ளலாம்; நல்ல தொடர்புகளை அதிகரித்துக்கொள்ளலாம்.

இறைவன் நமக்குத் தந்த அரிய சக்தி பேச்சு. இந்த சக்தியை உபயோகிக்கையில் எப்போதும் நல்ல முறையில் பயன்படுத்துவோம். (தொடரும்)

பழைய கற்கால மனிதனின் உறைவிடம்!

பழைய கற்காலத்து மனிதன் வாழ்ந்த 'குகை வீடு' ஒன்று ஆர்மீனியப் புதைபொருளாராய்ச்சியாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நஸதான் நதித் தீரத்திலுள்ள இக்குகை வீடு பாறையில் குடையப்பட்டுள்ளது. இதனது வாசல் பின்னர் மணலினாலும், கற்களிலும் அடைபட்டுப் போயிருந்தது. இக்குகை வீட்டினுள் கற்களினாலான 2,000க்குமேற்பட்ட கருவிகளையும் ஆயுதங்களையும் புதைபொருளாராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர்.

விஞ்ஞானம்

யந்திர டாக்டர்கள்! ஆசிரியர்கள்!

மனிதன் இன்று செய்யும் எல்லா வேலைகளையும் எதிர்காலத்தில் யந்திரங்கள் செய்துவிட முடியுமா? —விஞ்ஞானத்துறையில் ஏற்படும் வேக மாற்றங்களைக் கண்ணுறும்போது இப்படியான ஒரு கேள்வி இளம் இதயங்களில் எழுவது இயற்கையே.

பல தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களின் ஊதியங்களைக் கணக்கிடவும் அறிக்கைகளைத் தயாரிக்கவும் யந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

'யூரல்'-2 என்ற கணக்கீடு யந்திரம், ஏறக்குறைய 1000 மாறுபட்ட இருதய நோய்க் குறிகளை நினைவில் வைத்துக் கொள்கிறது. அனுபவமிக்க, முதிர்ந்த ஒரு டாக்டரும் வொருமை கொள்ளுமளவுக்கு இந்த யந்திரம், நோயாளியைப் பரிசோதித்து நோயை நிர்ணயம் செய்துவிடுகிறது. மனிதனைப் போன்றே ஒவ்வொரு புதிய நோயாளியையும் பரிசோதனை செய்வதன்மூலம், அந்த யந்திரம் அனுபவம் பெற்று தன்னைத் தானே வளர்ச்சியடையச் செய்து கொள்கிறது!

ஆசிரியர்களுக்கான வேலைகளைச் செய்யும் யந்திரங்களும் உள்ளன. தேர்வு வினாக்களைத் தந்து, அவர்களில் ஒவ்வொரு மாணவனின் விடைகளையும் கண்டு அவற்றிலுள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டி, விருப்பு வெறுப்பற்றமுறையில் இந்த 'யந்திர ஆசிரியர்கள்' அளித்துவிடுகிறது. யந்திர ஆசிரியர்களை இதனால் எந்தமாணவரும் ஏமாற்ற முடியாது.

தகவல்: காசி

வைத்தியம்

குஷ்ட நோய் பற்றி இந்திய மாணவரின் ஒரு ஆராய்ச்சி

குஷ்ட ரோகம் ஒரு பெரும் ஆபத்தான நோய், அதுகீழைய நாடுகளில் பரவலாகவுள்ளது உலகசுகாதார ஸ்தாபனத்தின் கணக்குப்படி இன்று உலகில் ஏறக்குறைய 1 கோடி 20 லக்ஷம் குஷ்டரோகிகள் இருக்கின்றனர். இவர்களில் ஒரு லக்ஷம் பேர் இந்தோனேஷியாவிலும். 15 லக்ஷம் பேர் இந்தியாவிலும் உள்ளனர்.

இந்த நோயைப் பற்றிப் பல நூற்றாண்டு காலமாகவே மக்கள் அறிந்திருந்தனர் என்ற போதும்கூட, நோய் நிர்ணயம், அதற்

(5-ம் பக்கம் பார்க்க)

மின்சார அதிர்ச்சிக்கு முதல் உதவி!

மின்சார அதிர்ச்சி பொதுவாக மின்னல் தாக்குவதால் அல்லது மின்சாரம் பாயும் கம்பியைத் தொட நேர்வதால் ஏற்படுகிறது.

அதிர்ச்சிக்கு ஆளானவரை மின்சாரக் கம்பியிடமிருந்து பிரித்தெடுப்பதே முதலில் செய்ய வேண்டிய வேலை. ஆயினும் உதவிக்குச் செல்பவர் 10 மீட்டர் தொலைவுக்குள் வெறுங்கால்களோடு செல்வது ஆபத்து. தரையிலும் மின்சாரம் பாய்ந்து கொண்டிருக்கும்! ரப்பர் செருப்பு அணிந்து கொள்வது நல்லது. நாக்குண்டவரை வெறுங் கையால் தொடக் கூடாது. ஈரமில்லாத கம்பை, உலோகமில்லாத ஒரு பொருளைக் கொண்டு நாக்குண்டவரை பிரித்தெடுப்பதே நல்லது. பிரித்தெடுத்ததும் அவரை விபத்து நடந்த இடத்திலிருந்து அப்புறப்படுத்திவிட வேண்டும். அவருக்கு உயிர்ப்பூட்டுவது நாம் செய்ய வேண்டிய அடுத்த நடவடிக்கை. எவ்வளவு விரைவில் இதைத் தொடங்குகிறோமோ, அவ்வளவுக்கு அவரது உயிரைக் காப்பாற்ற வாய்ப்புண்டு.

நாக்குண்டவரின் சுவாசத்தையும் இருதயத்துடிப்பையும் மீட்கும் முயற்சியே யாகும். இதனைச் செயற்கைச் சுவாசத்தின்மூலமும், இருதயத்தை மறைமுகமாகப் பிசைந்துவிடுவதன் மூலமும் செய்ய வேண்டும். இவற்றை 2 பேர் ஆளுக்கொரு சிகிச்சையாக ஏக காலத்தில் செய்ய வேண்டும். சுவாசமும் இருதயத் துடிப்பும் மீளும்வரையில் இவற்றைச் செய்ய வேண்டும்.

டாக்டர் இ. என். அபனஸ்யெவ்

அன்பு புத்தகசாலை

27 D, பெரியகடை — யாழ்ப்பாணம்

வருக! வணக்கம்!

பாடசாலைப் புத்தகங்கள், வாசிகசாலைக்குரிய அறிவு நூல்கள், மாணவரது உபகரணங்கள், தின, வார, மாதாந்தப் பத்திரிகைகள் ஒருங்கே பெற

அன்பு புத்தகசாலைக்கு வாருங்கள்

○ 31-9-68 வரையும் பாடசாலை நூல்கள் வாசகருக்கும் கழிவு தரப்படும்.

○ வாசிகசாலைகள் ஒழுங்காகப் பத்திரிகைகள் பெற, ஒழுங்கு செய்துகொள்ளலாம்.

"சிலை" இதழின் யாழ்ப்பாண ஏஜண்ட் ஆக்கப்பட்டுள்ளோம்.
விற்பனையாளர் தொடர்பு கொள்க.
ஜூலை இதழ் விற்பனையாகின்றது.

புதிய இடம்! நியாய விலையில் யாவும் பெறலாம்!

அன்பே எமது முதலாம்

றட்ஸ் விலை குறைப்பு

புதிதாக இறக்குமதி செய்யப்பெற்ற

"றட்ஸ் சைக்கிள்கள்"

வெகுவாக விலை குறைக்கப்பெற்றிருக்கின்றன

முந்திய விலை ரூ. 290-00

இப்போதைய விலை ரூ. 270-00

சைக்கிள் டைனமோக்களும் மற்றும் சைக்கிள் உபகரணங்களும் எமது கையிருப்பிலுண்டு.

உங்கள் தேவைக்கு முந்துங்கள்

நியூரோன் எலெக்ட்ரிக்கல்ஸ்

(வடமாகாணத்தின் பிரதான மின்சாதனங்கள் விற்பனையாளர்)

25, ஸ்ரான்லி ரோட் — யாழ்ப்பாணம். [போன்: 7016]

சந்தனம்

கோயில் தேவைகளுக்கும்
மங்கள வைபவங்களுக்கும்
இயந்திரத்தினால் அரைத்த

பச்சை சந்தனம்

எந்நேரமும் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். சுப்பிரமணியம்
அன் கொம்பனி

55, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம். — 160, செட்டியார் தெரு கொழும்பு-11.

போன்: 541 Residence: 7068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதைபந்தாட்டம்

'கிறீன்பீல்ட்' யாழ்.பொலிஸ் கோஷ்டியை வென்றது

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாணம் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகத்துக்கும் யாழ்ப்பாணம் பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக்கழகம் வெற்றி பெற்றது.

ஆட்டம் தொடங்கி 20 நிமிடங்கள் வரையும் இரு கோஷ்டியினரும் மிகவும் திறமையாக விளையாடினர். இடைவிடாமல் கிறீன்பீல்ட் கோஷ்டியினர் கோல்களைப் போடும் சந்தர்ப்பங்களை தவறவிட்டனர். இடைவேளைக்கு 5 நிமிடங்கள் இருக்கும்போது பொலிஸ் கோஷ்டியின் இடது முன்னணி வீரர் இன்ஸ்பெக்டர் டயஸ் தமது கோஷ்டியின் சார்பில் முதலாவது கோலை போட்டார். இடைவேளையின் போது பொலிஸ் கோஷ்டி ஒரு கோலைப் போட்ட நிலையில், கிறீன்பீல்ட் கோஷ்டி கோல்கள் எதுவும் போடவில்லை.

இடைவேளையின் பின் கிறீன்பீல்ட் கோஷ்டி மளமளவென கோல்களைப் போடத்தொடங்கியது. கிறீன்பீல்ட் கோஷ்டிவீரர்களாகிய தேவராசா, தம்பிராசா, ஆனந்தன், குமார் ஆகியோர் முறையே 2,2,2 1 கோல்களைப் போட்டனர். ஆட்ட முடிவில் கிறீன்பீல்ட் கோஷ்டியினர் பொலிஸ் கோஷ்டியை 7-2 கோல்களால் தோற்கடித்தனர்.

(தே.நி)

சைக்கிளுக்குப் பணம் கொடுக்கவில்லையாம் வாலிபர் தற்கொலை

உடுவில், நிக் மானிப்பாயைச் சேர்ந்த செல்லையா பூபாலசிங்கம் (18 வயது) என்ற வாலிபர் கிருமி நாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

சைக்கிள் வாங்கப் பணம் கொடுக்க இவரது தந்தையார் மறுத்துவிட்டதாகவும் இதனால் ஆத்திரமடைந்த வாலிபர் கிருமி நாசினி அருந்தித் தற்கொலை செய்துகொண்டதாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணை நடத்தித் தற்கொலையென தீர்ப்பளித்தார்.

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போகாதிருங்களில் காலை 10-30 மணி
ரகுநாதன், சந்திரகலா, தங்கவடிவேல்
நடித்த
நிர்மலா
எஸ். ஜி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு

கெபிட்டல் பிளாஸா மைலன்
(கொழும்பு)
விஜயா ராஜ் ஸ்ரீகிருஷ்ணா
[மட்டுநகர்] [நீர்கொழும்பு] [திருமலை]
★ ரவிச்சந்திரன்
★ ஜெயலலிதா
மனோரமா-நாகேஷ்-முத்துராமன்
பேபி பத்மினி-மனோகர்
நடித்த
ஸ்ரீ விநாயகா பிக்சர்ஸ் நான்

கிங்ஸ்லி
[கொழும்பு]
2.00 மாலை 6 00, 9.30.
★ ஜெமினி கணேசன்
★ சரோஜாதேவி
★ தங்கவேலு
நடித்த
கல்யாணப்பரிசு

இப்பொழுது திரையிடப்படுகிறது!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30, 10-00.
★ ஜெய்சங்கர்
★ எல்.விஜயலக்ஷ்மி
★ மனோகர்
நடித்த
வல்லவன் ஒருவன்

முடிக்குரிய வழக்கறிஞர்

யாழ்ப்பாணம், செவ் யாழ்ப்பாணத்தை சேர்ந்த பிரபல வழக்கறிஞர் திரு எஸ். கனகரத்தினம் முடிக்குரிய வழக்கறிஞராக நியமிக்கப்பட்டுள்ளார். யாழ்ப்பாண மாவட்ட சமாதான நீதவானாகவும், உத்தியோகப்பற்றற்ற நீதிபதியாகவும், திடீர் மரணவிசாரணை அதிகாரியாகவும் கடமை யாற்றும் இவர், சென். ஜோன்ஸ் கல்லூரி மழைய மாணவராவார். கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவருமாவார். நல்லூரைச் சேர்ந்த காலஞ்சென்ற சின்னத்துரை தம்பதியரின் புதல்வரான இவர், திவ்ய ஜீவன சங்கம் யாழ்ப்பாணக் கிளையின் செயலாளராகவும் கடமை யாற்றுகிறார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ். 23—7—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

344 மீற்றர் அலை 61 மீற்றர்
காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 குரல்வளை, 8-00 இசைகேளீர், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீற்றர் அலை 49 மீற்றர்
பகல் 12-00 தொழிலாளர் வேளை, 1-00 இளைஞர் மன்றம்.

344 மீற்றர் அலை 61 மீற்றர்
மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 ஒடிவிளையாடு பாப்பா.
இரவு 6-15 நாடோடிப் பாடல்கள், 6-30 காலைமஞ்சரி, 6-45 [illegible], 7-00 நாமகளுக்கு, 7-30 பாடல், 8-00 முகவிலாசநிகழ்ச்சி, 9-30 வீணை — எம். ஏ. கலியாண கிருஷ்ணபாகவதர்.

மானிப்பாய் வெஸ்லி
தினசரி 6-30, 9-30.
பிரீ பேஸ்டா, போயா 2-30
சிவாஜி கணேசன்-விஜயா
நடித்த
செல்வம்

ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நாகேஷ் — விஜயநிர்மலா
நடித்த
பணமா பாசமா

REGAL JAFFNA
Daily at
4-15, 7-00 & 9-45 P. M.
Marlon Brando
Yul Brynner
in
MORITURI

NOTICE

of Partition Action.

In The District Court of Chavakachcheri.

1. B.N Emerson and wife
2. Ariyamalar both of Nunavil west, Chavakachcheri. Plaintiff

No. 3239. Partition.

Vs.

1. S. T.Thambithurai and wife
2. Annamuthu, and
3. Sinnathamby Thambithurai Selvaratnam, all of Nunavil west, Chavakachcheri. Defendants

It is hereby notified that action No 3239 P. has been instituted in the District Court of Chavakachcheri under the Partition act No 16 of 1951 for the partition / sale of the land/lands called "verakkernivalavu" in extent 43, 1|4th Lms v. c. Of this the Eastern half share in extent 21, 5/8th Lachams v c Twenty one and five eighth Lachams varagu culture and situated at Madduvil South in the parish of Chavakachcheri, Tenmaradchy Division Jaffna District Northern province.

The defendants in the aforesaid action are summoned to appear in Court onthe 26th day of July 1968 at 10 O'clock of the forenoon.

By order of Court.
(C. Cumaraswamy),
Secretary/Chief Clerk.

This 4th day of December 1967,

Drawn by
[K. Gnanachchandran]
Proctor for Plaintiffs. 892

குஷ்ட நோய்...

[4-ம் பக்கத்தொடர்ச்சி]

கான சிகிச்சை, தடுப்பு முறைகள் ஆகியவை இன்னும் தீர்க்கப்படாத புதிராக இருந்துவருகின்றது. தூரநிர்ஷ்டவசமாக இந்த நோய்க்கான, விரைவில் நம்பகமாகக் குணமளிக்கும் மருந்துப் பொருட்களை எவரும் கண்டுபிடிக்கவில்லை

'பரிசோதனைக் கூடத்தில் மைக்கிரோஸ்கோப் பரிசோதனைக்குட்படுத்தி நோயைக் கண்டுபிடிப்பதே மிகச்சாதாரண முறையாகும்' என்று குஷ்டரோகத்தைத் தீர்ப்பதிலுள்ள பிரச்னைகள் குறித்து மாலைதோவிலுள்ள பாஸ்டீஸ் ஸுமுபா நட்புறவு பக்கக் கழகத்தில் வைத்திய மாணவர்களின் மாநாட்டில் இந்திய மாணவரான ஜார்ஜ் மத்யூ ஓர் ஆராய்ச்சிக் கட்டுரையைச் சமர்ப்பித்தார்.

'மிகவும் அறிவார்ந்த முறையில் நோயாளியின் வேலை, ஓய்வு ஆகியன

வரி விளம்பரம்

தேவை

எனதுசலூனுக்கு உடன் இரு தமிழ் வாலிபத் தொழிலாளர் தேவை. சாப்பாடின்றி ரூபா 6/- (ஆறு) நாளாந்த வேதனம். நேரில் வரவும். யோ. ஆனந்தன். 81, மெயின்வீதி. முல்லைத்தீவு. 1261

யாழ்.மாநகரசபை எல்லைக்குள் குறைந்த வாடகையுள்ள மிச்சார வசதியுடன் கூடிய வீடு ஒன்று தொழில் செய்ய தேவை. விண்ணப்பிக்க: சிவமுருகன், புன்னாலைக்கட்டுவன். 1263

யாழ் நகரில் எமதுபொருட்களை வீடுகளுக்குவிநியோகம் செய்ய தகுதியும் ஆர்வமும் உள்ள பெண்கள் தேவை. எழுத்தமூலம்விண்ணப்பிக்கவும். சிவமுருகன், புன்னாலைக்கட்டுவன். 1264

தேநீர்க் கடைக்கு சப்ளை செய்வதற்கும் சமையல் செய்வதற்கும் ஆட்கள் தேவை, நவாலி பேப், அரியாலை, யாழ்ப்பாணம். 1265

கைப்பந்தாட்ட கற்றுப்போட்டி

பருத்தித்துறை, திரு. வடமராட்சிக் காரியதரிசி திரு. எஸ். ஜெயகாந்தன் தொகுதிவாரியாக ஒருகைப் பந்தாட்டக் கற்றுப்போட்டியை நடத்த ஏற்பாடு செய்துள்ளார்.

உடுப்பிட்டி, பருத்தித்துறை ஆகிய தொகுதிகளில் பல கோஷ்டிகள் பங்குபற்றும். பயிற்சி உத்தியோகத்தர் திருவாளர்கள் கே. காந்திகேசு, எஸ். சதிர்சுமத்தம்பி ஆகியோர் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளனர்.

நெடுந்தீவு கி. ச. தலைவர்

நெடுந்தீவு, செவ் நேற்று நடைபெற்ற நெடுந்தீவு கிராமசபைத் தலைவர் தெரிவில் நெடுந்தீவு மேற்கு 5-ம் வட்டார அங்கத்தவரான திரு. தம்பிப்பிள்ளை அம்பலம் தெரிவு செய்யப்பட்டார். இவரோடு போட்டியிட்ட திரு. ம. கணபதிப்பிள்ளையை மூன்று அதிகப்படியான வாக்குகளால் இவர் தோற்கடித்தார். திரு. வ. செல்லப்பா உபதலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்

அமைதிவேண்டும் அதிகளவு வைட்டமின்கள், புரோமைடுகளுடைய ஆகாரத்துக்கு மிகவும் அவசியம்' என்கிறார் இந்திய மாணவர் ஜார்ஜ் மாத்யூ.

வின்ஸர் வெண்திரையில்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். — பி. சரோஜாதேவி
பி. எஸ். வீரப்பா, ஜெயலலிதா, நாகேஷ்
ஆகியோர் நடித்த
அரச கட்டளை

MANOHARA JAFFNA
Daily at 2-30 6-30, 10 00 p.m.
Poya Days 10-30 A.M
ஆர்ஸு [ஹிந்தி]
Rajendra Kumar & Sathana
in
ARZOO
[Hindi] [Eastman color]
Music:- Shanker, Jeikashian.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"தொண்டர் சபை கலையாது; கதவுகளும் திறக்காது"

திரு. சுந்தரலிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், செவ். "தொண்டர் சபையைக் கலைக்க முடியாது. ஆலயக் கதவுகளைத் திறக்க முடியாது. எந்த நிலைமையையும் சமாளிக்க தொண்டர்கள் தயாராக இருக்கிறார்கள்.

தொண்டர்சபைத் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் நேற்று நமது நிருபரிடம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: எம்மீதும் தொண்டர்கள்மீதுமுள்ள வழக்கு விசாரணைகள் முடியும்வரை எவ்வித சமரச பேச்சுவார்த்தைகளிலும் கலந்துகொள்ளமாட்டோம். பிரிவிக்கவுன்சிலவரை வழக்கைத் தயாராக இருக்கிறோம்.

கோயில் கதவுகளைத் திறந்துவிடவேண்டிய அவசியமில்லை. பூசைகளும், திருவிழாக்களும் வழமைபோல நடைபெறுகின்றன. 'இடது சாரிகளின் பயமுறுத்தலுக்காக கோயில் கதவுகளைத் திறந்துவிடமுடியாது.

தொண்டர்சபையில் மேலும் 200 பேர் சேரமுன்வந்திருப்பதாக தெரியவருகிறது. தொண்டர் சபையில் ஏற்கெனவே 200 பேர் இருப்பதாக தொண்டர் ஒருவர் தெரிவித்தார்.

சுந்தரர் - எட்மன்ட் ஆலயபிரவேச சம்பாஷணை

'புரட்சிதான் வழி' என்றார் சமரக்கொடி 'அதற்குமாறு' என்றார் சுந்தரர்

யாழ்ப்பாணம், செவ். புரட்சிவாத சமசமாஜ கட்சித் தலைவர் திரு. எட்மன்ட் சமரக்கொடி, நேற்றுக்காலை கோவிலுக்குவந்த நிலைமையை நேரில்பார்வையிடுச்சென்றார்.

தொண்டர்சபைத் தலைவர் திரு. சுந்தரலிங்கத்துடன் லெ திமிடங்கள் பேசிய பின் கோவில் மண்டபங்களைப்பற்றி அங்கு நின்றவர்களை, கேட்டறிந்த திரு. எட்மன்ட் சமரக்கொடி, வெளிவாருடனும் கலந்துரையாடினார்.

கோயில் முடிவில் பறந்து கொண்டிருந்த சிவப்புநிறக்கொடிகளைச் சுட்டிக்காட்டிய திரு. சமரக்கொடி, எதிரில் புரட்சிக்கொடி தான் பறக்கிறது என்றார்.

'முன்னர் நீங்கள் ஆலயப் பிரவேசத்தை ஆதரித்தீர்களே' என்று திரு. சுந்தரலிங்கத்திடம், திரு. சமரக்கொடி கேட்டபோது, பலாத்கார ஆலயப்பிரவேசத்தை ஆதரிக்கவில்லையென திரு. சுந்தரலிங்கம் கூறினார்.

புரட்சிமூலம் இந்நாட்டில் எதிலும் வெற்றிபெறமுடியாதென்றும், புரட்சொதிகளு குதான் மாறுவர் என்றும் திரு. சுந்தரலிங்கம் சிரித்தபடி கூறினார்.

வேட்கவார் நிறைவளிக்கு மூலம் இப்பிரச்சினையை தீர்க்கமுடியாதென்றும், நீதிமன்றங்களின்மூலம், சிறுபான்மையினர் உரிமைகளை நிலைநாட்டலாமென்றும், சத்தியாக்கிரகம் பயனளிக்காதென்றும் பலாத்கார ஆலயப்பிரவேசம்தான் பயனளிக்குமென்றும் திரு. எட்மன் சமரக்கொடி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

(ஆள். நிரு.)

சத்தியாக்கிரகம் நேற்று நடைபெறவில்லை

யாழ்ப்பாணம், செவ். மாவிட்டபுரக்கந்தசுவாமி கோவிலில் நேற்று நண்பகல் 12 மணிக்கு முருகப்பெருமான் வள்ளி தெய்வானை சமேதமாக பக்தர்களின் ஆரோகரா கோஷத்தின் மத்தியில் எழுந்தருளினார். நேற்று இரண்டாவது தினமாக ஹரிஜனர்களின் சத்தியாக்கிரகம் நடைபெறவில்லை. சுவாமி வெளிவீதி வந்தபோது, தேரடியில் ஒரேஒரு ஹரிஜனர் மட்டும் நின்று வாசித்துக்கொண்டிருந்தார்.

நண்பகல் 11 மணிக்கு சுற்றுப்பலி புறப்பட்டது. இதைத்தொடர்ந்து சுவாமி வெளிவீதி புறப்பட்டார். பக்தர்கள் பக்திப் பாடல்கள் பாடியபடி பின்னே சென்று கொண்டிருந்தனர். தொண்டர்சபைத் தலைவர் திரு சி. சுந்தரலிங்கமும் பின்னால் சென்றுகொண்டிருந்தார்.

ஆதீனகர்த்தர்வீட்டு வாசலிலுக் சுவாமி சென்று கொண்டிருந்தபோது, மணநாட்டில் கலந்து கொண்ட உயர்தர அதிகாரிகள் சுவாமிதரிசனம் செய்தனர். கோவில் வாசலில் நூறுபேர்கொண்ட கோஷ்டியொன்று எந்நேரமும் பக்திப்பாடல்கள் பாடிக்கொண்டிருந்தது.

பக்தர்-தொண்டர்-குருக்கள் படப்பிடிப்பாளர்கள்

யாழ்ப்பாணம், திங்கள் சுவாமி வெளிவீதி புறப்பட்ட பின்னர் மங்கலவாத்தியம் சேர்ந்த பொன்னம்பலம் என்ற வயோதிப பக்தர், கம்பிவேலியால் நுழைந்து உள்ளே செல்ல முயற்சித்தார்.

தொண்டர்கள் அவரை உள்ளே செல்லவிடாது தடுத்தபோது கொழும்பிலிருந்து வந்த படப்பிடிப்பாளர்கள் பலரிடம் போஸ்களிலிருந்து படம்பிடித்தனர்.

ஏ. எல். பி. தவராசா தலைமையில் பொலிஸ் கோஷ்டி ஒன்று விரைந்து அவ்விடத்திற்கு சென்றது.

தொண்டர்கள் அவ்வயோதிபரை அணைத்தபடி கூட்டிச் சென்று, வாசலால் உள்ளே செல்லவிட்டனர். அந்த வயோதிபர் வழக்கமாக கோவிலுக்கு வந்து வழிபடுபவர் என்று தொண்டர் ஒருவர் தெரிவித்தார்.

சற்றுப்பலி வெளியில் புறப்பட்டசமயம், உயர் அதிகாரிகளின் சமரச யோசனைக்கு துரைச்சாமிக் குருக்கள் சம்மதித்துவிட்டார் என்ற பேச்சு எங்கும் பரவியது. பக்தர்கள் மத்தியில் பெருத்த பரபரப்பு ஏற்பட்டது தொண்டர்கள் பரபரப்படைந்தனர்.

'குருக்கள் சம்மதித்தாலும் நாங்கள் சம்மதியோம்' என சிலர் கோஷமிட்டனர்.

அதே சமயம் துரைச்சாமிக்குருக்கள் கோயிலை நோக்கிசென்றுகொண்டிருந்தார்.

'வழி விடுங்கள்' என்று தொண்டர் சபை தலைவர் திரு. சி. சுந்தரலிங்கம் சத்தமிட்டார். குருக்களுக்கு கதவு திறக்க தொண்டர்கள் முன்வரவில்லை. அவர் கம்பிவேலியால் புகுந்து உள்ளே சென்றார்.

உண்டபகதவை திறக்க குருக்கள் தொண்டர்களிடம் கூறினார். தொண்டர்கள் திறக்கவில்லை. உடனே திடீரென குருக்கள் சுமார் 10 அடி உயரமுள்ள வாதுபக்க கவரிலுள் விறுவிறு என்று ஏறிக்கோவிலுக்குள் சென்றார்.

இன்று

யாழ்ப்பாணம், செவ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் சப்பரத் திருவிழாவாகிய இன்று காலை 9 மணிக்கு வசந்தமண்டப பூஜையும், மாலை 6 மணி முதல் இரவு 7-30 மணிவரை திருப்பூங்குடி திரு. வி. க. ஆறுமுகம் ஆதீனத்தின் 'ஸ்ரீ வள்ளி' என்னும்பொருள்பற்றிய சொற்பிரசங்கமும் பின் இரவு 7-30 மணிக்கு வசந்தமண்டப பூஜையும் பின் சப்பரத் திருவிழாவும் நடைபெறும்.

விமானம் மூலம் கடத்தல்?

21,000 ரூபா அபராதம்

ஆளவெட்டி, ஞ யிறு இன்று மலாலிவிமானநிலையத்திலிருந்து திருச்சிக்குப் புறப்படுவதற்குச் சென்ற ஒருவரிடமிருந்து 7000 ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலி, இரத்தினக்கற்கள் ஆகியவற்றை சுங்கக் கலக்டர் திரு. செனிவரத்தினம் கைப்பற்றினார். பொருட்கள் பறிமுதல்செய்யப்பட்டதுடன் ரூபா 21,000 அபராதம் செலுத்தும்படியும் தீர்ப்பளிக்கப்பட்டது.

மாவிட்டபுரத்துக்கு வந்தார்கள்

யாழ்ப்பாணம், செவ் கொழும்பிலிருந்து வந்த வழக்கறிஞரான திரு. என். சத்தியேந்திரா நேற்று மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்கு சென்று நிலைமையை நேரில் பார்வையிட்டார்.

திருகோணமலையிலிருந்து வந்த வைப் பிரமுகர் ஒருவரும் நேற்று கோவிலுக்கு வந்து நிலைமையைப் பார்வையிட்டார்.

சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி எம். பி. யான திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா இங்கு வந்து ஆலயப்பிரவேச விஷயத்தில் தலையிடமாட்டாரென்றும் சத்தியாக்கிரக இயக்கத்தை பலவீனப்படுத்த சிலர் முயற்சித்து வருவதாகவும் சீன சார்பு கம்யூனிஸ்ட் கட்சி பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்க அதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

என ஆதீனகர்த்தா தமது பதிலில் தெரிவித்திருந்தார், அரசாங்க அதிபரின் கடிதம்பற்றி பரிசீலனை செய்வதற்கு வசதிக்குறைவாக இருப்பதாகவும் இதற்கு பதிலளித்துக்கொள்ளுமாறும் ஆதீனகர்த்தா ஸ்ரீ துரைச்சாமிக் குருக்களிடம் தமது பதிலில் தெரிவித்திருந்தார்.

ஆகஸ்ட் மாதம் முதல் திகதி ஆலயக் கதவுகளை சகலருக்கும் திறந்துவிடுமாறு அரசாங்க அதிபர் தமது கடிதத்தில் கோரியிருந்தார்.

சமரச முயற்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ் தலைவர்களும் தெரிவித்த சமரச யோசனைகளை "இப்போது ஒன்றும் செய்வதற்கில்லை" என்று ஆலய நிர்வாகத்தினர் நிராகரித்துவிட்டனர். தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் ஆகியோர் பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகாவை நேற்று சந்தித்து ஆலயப் பிரவேசப் பிரச்னை சம்பந்தமாகப் பேசியதாகத் தெரிகிறது. மாவிட்டபுரம் ஆலயப் பிரதிநிதிகளை நேற்று முன்தினம் சந்தித்துப் பேசிய தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் திருவிழா முடிந்தபின்னர் ஆலயப்பிரவேசப் பிரச்னைக்கு ஒருநிரந்தர தீர்வுகாண வழிவகுப்பதுபற்றி ஆலோசனைசெய்யலாமென்றும் ஆதிகுருமுன்னர் தொண்டர்படையைக் கலைத்துவிட்டு, கம்பிவேலித் தடையை அகற்றுமாறும், சத்தியாக்கிரகம் நிறுத்தப்பட்டுவிடுமென்றும் யோசனை தெரிவித்ததாகத் தெரிகிறது.

வெடி விபத்தில் 4 வயது சிறுவன் பலி

யாழ்ப்பாணம், செவ். நேற்று இரவு கரையூரில் நிகழ்ந்த வெடிவிபத்தில் 4 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்தான்.

கரையூர் அரிச். அன்னம்மாள் தேவாலய விழாவின்போது வெடிகொழுத்துவதைப் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே வெடி திடீரென வெடித்ததால் இப் பரிதாபச்சம்பவம் ஏற்பட்டதாகத் தெரியவருகிறது. இவ் விபத்தின்போது ஆறுபேர் என்ற 12 வயதுடைய சிறுவன் ஒருவனும் ஜெயராஜ் என்ற 19 வயது வாலிபரும் படுகாயமுற்றனர். இவர்கள் இப்போது யா. ம. ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

லூக் என்ற சிறுவனின் மரணம் சம்பந்தமாக மரண விசாரணை நடைபெறுகிறது.

கரையூர் பொலிஸார் இவ் வெடிவிபத்து சம்பந்தமாக விசாரணை நடத்துகின்றனர்.

24 மணி நேரமும் சத்தியாக்கிரகதிட்டம்

சமரச முயற்சிகள் வாவும் தோல்வியடைந்ததால் மாவிட்டபுரம் ஆலயத்தில் சத்தியாக்கிரக இயக்கத்தை இன்று காலையிலிருந்து தீவிரப்படுத்துவதென தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தலைவரும் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினரும் தீர்மானித்ததுடன் தீர்மானத்தை அரசாங்க அதிபருக்கும் வடமகாணப் பொலிஸ் அதிபருக்கும் தெரிவித்துள்ளனர்.

இன்று அதிகாலை முதல் மாவிட்டபுரம் ஆலயத்துக்குச் செல்லக்கூடிய சகல வாசல்களிலும் ஹரிஜனர்கள் சத்தியாக்கிரகம் செய்யவிருப்பதாகவும் தேர், தீர்த்தத் திருவிழா வரை சத்தியாக்கிரகத்தை நீடிப்பதற்குத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிகிறது.

24 மணி நேரமும் சத்தியாக்கிரகம் நீடித்தால் சுவாமியை வெளியே கொண்டுவர முடியாத நிலை நீடிக்குமென்றும் இதனால் ஏற்படக்கூடிய மோசமான நிலைமையைச் சமாளிப்பதற்கு என்ன நடவடிக்கைகளை எடுப்பதென்பது பற்றியும் நேற்று மாலை உயர்தரவெளிவிவ அதிகாரிகளின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. இம் மகா...

ஆலயப்பிர.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்தசமயம் ஆதீனகர்த்தாவின் வீட்டிற்கு வெளியில் திரு. எம். சி. சுப்பிரமணியம், முன்னாள் செனட்டர் ஜி. தங்கையா தலைமையில் சுமார் 50 பேர் அடங்கிய சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி கோஷ்டியொன்று காத்திருந்தது. இக்கோஷ்டி தெல்லிப்பழையிலிருந்து கால் நடையாகக் கோவிலைவந்தடைந்தது.

மகாநாடு முடிந்தபின்னர் அரசாங்க அதிபர், சிறுபான்மைத் தமிழர்களை அழைத்து மகாநாட்டில் முடிவெதுவும்எடுக்கப்படவில்லையென்றும், பிறகுமுடிவு தெரியுமென்றும் கூறினார். இதைத்தொடர்ந்து அக் கோஷ்டி, தெல்லிப்பளை நோக்கிச்சென்றது.

ஸ்ரீதுரைச்சாமி குருக்கள், தர்மகர்த்தாக்களுடனும், தொண்டர்சபைத் தலைவர் திரு. சி. சுந்தரலிங்கத்துடனும் ஆலோசனை நடத்தினார். ஆலயப்பிரவேசத்திற்கு இடையூறு குறிப்பதில்லையென்றும், திருவிழாக்களை வழமைபோல் நடத்துவதென்றும் இவர்கள் தீர்மானித்தனர். இந்த முடிவை, அரசாங்க அதிபருக்கு அறிவிப்பதென்றும் தீர்மானித்தனர்.

இராமநாதபுரம், திரு. ஆட்டுக்கடாவொன்று 12 அடி நீளமான வெங்காயத்திப்பாம்பிடம் சிக்கித்தவித்தது. அரை மணிநேரம் இந்நிலை நீடித்தது. ஒரு சிலர் வந்து பாம்பை இரண்டுதுண்டாக்கினர்.

தேவை

நாம் ஏஜெண்டுகளாகவுள்ள விற்பனைப்பொருட்களை சேமித்து [ஸ்டொக்] மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனை செய்வதற்கு யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை, அச்சுவேலி, கல்லுண்டாய், நெல்லியடி, கிளிநொச்சி, மாங்குளம், வவுனியா, மன்னார் ஆகிய இடங்களில் தகுதிவாய்ந்த விநியோக ஏஜண்டுகள் தேவை. ரூ. 2000க்கு குறையாது பொருட்களை வாங்கி விற்பனை செய்யக்கூடியவர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும். மாத வேதனமாக ரூ. 200 ம் கமிஷனும் வழங்கப்படும். அன்டன் பிறதர்ஸ் & கோ மொம்பசாக் கட்டடம், டொன்பிறேகி, யாழ்ப்பாணம். 1586

இப்பத்திரிகை சமநாடு சாக் யாழ்ப்பாணம் கெல்க் இலக்கத்திலுள்ள அவர்களது ஆண்டு ஜூலை மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

லிமிட்டெட் ஸ்தாபனத்தார் கோவில் மேலை வீதி 68-ம் அச்சகத்திலிருந்து [illegible] அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org